செ.வெ.எண்: 10 / ஏப்ரல் நாள்: 07.04.2016

## இராமநாதபுரம் மாவட்டம்

## மீன் இனப்பெருக்க காலத்தைக் கருத்திற்கொண்டு வருகின்ற ஏப்ரல் 15 முதல் மே 29 வரை 45 நாட்களுக்கு விசைப்படகுகள் மற்றும் இழுவைப்படகுகள் மூலம் மீன்பிடிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ச.நடராஜன் இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

தமிழ்நாடு கடல் மீன்பிடி ஒழுங்குபடுத்தும் சட்டம் 1983-இன் கீழ், தமிழகத்தின் கிழக்கு கடற்பகுதியில் மீன் இனப்பெருக்க காலத்தை கருத்திற்கொண்டும், மீன்வளத்தைப் பாதுகாத்திடும் பொருட்டும், ஆண்டுதோறும் ஏப்ரல் 15 முதல் மே 29 வரை (இரு நாட்களும் உட்பட) 45 நாட்களுக்கு விசைப்படகுகள் மற்றும் இழுவைப் படகுகளைக் கொண்டு கடலில் மீன்பிடிக்க தடை விதிக்கப்பட்டு வருகிறது. அவ்வாறே, 2016-ஆம் ஆண்டும் இக்காலங்களில் மீனவர்கள் மேற்படி மீன்பிடி கலன்களை உபயோகப்படுத்தி கடலுக்குள் மீன்பிடிக்கச் செல்ல தடைவிதித்து அரசால் ஆணையிடப்பட்டுள்ளது. அதன்படி மேற்குறிப்பிட்டுள்ள காலங்களில் இராமநாதபுரம் மாவட்ட மீனவர்கள் விசைப்படகுகள் மற்றும் இழுவைப் படகுகளை பயன்படுத்தி கடலுக்குள் மீன்பிடிக்கச் செல்லக் கூடாது.

மேற்கண்ட தகவலை இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**